# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.02.05

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 03/2016**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்
வளாக அதிபதிகள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

**பணிப்பாளர் / விடுதிகள் எனும் பதவிப் பெயரை 'பணிப்பாளர் / மாணவர் விடுதி வசதிகள்' என மீண்டும் பெயர் குறிப்பிடல்**

2011.03.10 ஆம் திகதிய 948 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர் / விடுதிகள் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

**2.** 2015.12.03 ஆம் திகதி நடைபெற்ற ஆணைக் குழுவின் 930 ஆவது கூட்டத்தின்போது பணிப்பாளர் / விடுதிகள் எனும் பதவியை 'பணிப்பாளர் / மாணவர் விடுதி வசதிகள்' என மீண்டும் பெயர் குறிப்பிடுவதற்கு ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. அதற்கமைய, புதிய பதவிப் பெயர் உட்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இணைப்பு 1 ஆக மீண்டும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

4. தயவுசெய்து அதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**
**தலைவர்**

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள/ சிரேஷ்ட உதவி நூலகர்கள் / உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/210 (i) T

**இணைப்பு - I**

## பணிப்பாளர் / மாணவர் விடுதி வசதிகள் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை

| பதவி | ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை | தகைமைகள் |
|---|---|---|
| பணிப்பாளர் / மாணவர் விடுதி வசதிகள்<br>U-EX 2 (a) | பதவி உயர்த்துவதன் ஊடாக<br><br>முதலாவதாக, உரிய உயர் கல்வி நிறுவகத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல் ஒன்றின் ஊடாக அந்த நிறுவனத்தில் பணிபுரிபவர்களிலிருந்து.<br>குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தில் பணிபுரியும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் இல்லையாயின் பல்கலைக்கழக முறைமையினுள் உள்ளக ரீதியாக அறிவித்தல் வெளியிடப்பட்டு ஆட்சேர்த்துக் கொள்ளல்.<br><br>நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக தேர்ந்தெடுக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது 40% இனைப் பார்க்கிலும் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுத்தல் சம்பந்தமாக கவனத்திற் கொள்வதற்கான உரிமையைப் பெறுவார்கள். | ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவகமொன்றில் துணை மேற்பார்வையாளர் (விசேட தரம்) பதவியை வகித்தல் மற்றும் அப் பதவியில் உறுதி செய்யப்பட்டிருப்பதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து ஒரு வருட காலத்திற்குக் குறையாத பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவகமொன்றில் அப் பதவியில் மூன்று வருட கால(03) திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல்<br><br>**அல்லது**<br><br>துணை மேற்பார்வையாளர் பதவியை வகிப்பதுடன் ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவகமொன்றில் அப்பதவியில் 20 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் மற்றும் அப் பதவியில் உறுதி செய்யப்பட்டிருப்பதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல்கலைக் கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து ஒரு வருட காலத்திற்குக் குறையாத பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல். |